செ.வெ.எண். 99 நாள். 31.07.2017.

## திருநெல்வேலி மாவட்டம்

குற்றாலம் சாரல் திருவிழாவின் ஐந்தாவது நாளான இன்று திங்கட்கிழமை (31.07.2017) குற்றாலத்தில் உள்ள ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில் சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு குறித்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான ஓவியப்போட்டி நடைபெற்றது.

-------

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிப்பதற்காக மாவட்ட நிர்வாகத்தினால் ''சாரல் விழா'' ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவினை மேலும் மெருகூட்டும் வண்ணமாக ''சாரல் திருவிழாவின் அங்கமாக, குற்றாலத்தில் உள்ள ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான ஓவியப்போட்டியினை ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி. திரிபுரசுந்தரி போட்டியினை தொடங்கி வைத்தார். ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி பேராசிரியர் கயர்கன்னி, உதவி பேராசிரியர்கள் மதுமதி, சாந்தி, முனைவர் பாண்டிதேவி ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை சிறப்பாக நடத்தினார்கள்.

இப்போட்டியில் 87 கல்லூரி மாணவ, மாணவிகளும் , 76 பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர் மொத்தம் 163 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இதில் அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கான தலைப்பாக வன விலங்குகளை பாதுகாப்போம் என்ற தலைப்பில் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. முதல் பரிசை மஞ்சம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளியை சேர்ந்த மாணவி சங்கீதா வென்றார். இரண்டாவது பரிசை வீராமமுனிவர் பள்ளியைச் சேர்ந்த மாணவன் பிரவீன்பாலாஜி வென்றார். மூன்றாவது பரிசை மஞ்சம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளியை சேர்ந்த மாணவி அஜிதாஸ்ரீ வெற்றி பெற்றார்கள்.

மேலும், தனியார் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான தலைப்பாக வன விலங்குகளை பாதுகாப்போம் என்ற தலைப்பில் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. முதல் பரிசை பாரத் வித்யாலயா மந்திர் பள்ளியைச் சேர்ந்த மாணவன் அமலாதித்தன் வென்றார். இரண்டாவது பரிசை ஹில்டன் மெட்ரிக் பள்ளியை சேர்ந்த மாணவன் அகிலன் வென்றார். மூன்றாவது பரிசை இம்மானுவேல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவர் அஷித் சாகுல் ஜோசப் வெற்றி பெற்றார்கள்.

மேலும், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான தலைப்பாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. முதல் பரிசை ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி கலைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் இசக்கிராஜ் வென்றார். இரண்டாவது பரிசை ஆலங்குளம் சர்தார் ராஜா கல்லூரியைச் சேர்ந்த மாணவி அகிலாண்டேஸ்வரி வென்றார். மூன்றாவது பரிசை குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி கவிதா வெற்றி பெற்றார்கள்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த ஓவியப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு குற்றாலம் கலைவாணர் கலையரங்கில் வைத்து துணை இயக்குநர் தோட்டக்கலைத்துறை திரு. கண்ணன், மற்றும் வேளாண்மை துறை இணை இயக்குநர் திருநெல்வேலி திரு. கனகராஜ் அவர்கள் சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. வே. சாந்திராணி அவர்கள், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி பேராசிரியர் கயர்கன்னி, உதவி பேராசிரியர் மதுமதி, திருநெல்வேலி மாவட்ட என்எஸ்எஸ் மண்டல அலுவர் திருமதி.ஜீவா, உதவி இயக்குநர் கீழப்பாவூர் திருமதி. ஜெயபாரதி மாலதி அவர்கள், உதவி இயக்குநர் தோட்டக்கலைத்துறை ராதாபுரம் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள், உதவி இயக்குநர் தோட்டக்கலை துறை பாப்பாக்குடி திருமதி.சுபா வாசுகி அவர்கள், உதவி இயக்குநர் தோட்டக்கலைத்துறை கடையநல்லூர் திரு. முத்துமாலை அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியிடு :**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.